# மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| | | |
|---|---|---|
| **OS.No. 82 /2012** | **Date : 05.11.2025** | **DW 2** |
| Name: மகேந்திரன் | த/பெ. காளியண்ணன் | |

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1 ஆம் பிரதிவாதி ராமாயி எனது தாயார். எனது தாயார் நங்கவள்ளியில் உள்ள கூட்டுறவு சொசைட்டியில் கிளார்க்காக பணிபுரிந்தார். எனது தாயார் சுமார் 5 வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்டார். எனது தாயார் இறந்தபின்பு எனது தாயாருக்கு வந்த சொத்துக்களை நாங்கள்தான்அனுபவித்து வருகிறோம் என்றால் சரிதான். எனது தாயார் பெயரில் உள்ள 2 செண்ட் நிலம் மல்லிகுந்தம் கிராமத்தில் உள்ளது. எனது தாயார் வாங்கிய கடனை நானும் எனது தம்பியும் தான் செலுத்தி வந்தோம். எனது தாயார் 5 நபர்களிடம் வாங்கிய கடனை திரும்ப செலுத்திவிட்டோம். வாதி குமரவேலிடம் வாங்கிய கடனை திரும்ப செலுத்தவில்லை என்றால் சரியல்ல. என் தாயார் உயிருடன் இருந்தபோதே கடனை செலுத்திவிட்டோம். எவ்வளவு தொகை செலுததினோம் என்றால் ரூ.10,000/- செலுத்தினோம். எந்த தேதியில் பணம் செலுத்தினோம் என்று எனக்கு ஞாபகமில்லை. என் தாயார் பணம் செலுத்தியபோது நான் உடன் செல்லவில்லை. என் தாயார் சொல்லி தெரியும். என் தாயார் வாங்கிய கடனை திரும்ப செலுத்தியபோது ஆவணங்களை திரும்ப பெற்றுக்கொண்டாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் தாயார் உயிருடன் இருக்கும்போதே வழகது தாக்கல் செய்துவிட்டார் என்றால் சரிதான். என் தாயார் வழக்கு நடத்திய விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். முருகேசனிடம் என் தாயார் சீட்டு போட்டதாகவும் அதற்கு பொறுப்புறுதிக்காக கொடுத்த புரோநோட்டை வைத்து வாதி வழகது தாக்கல் செய்திருப்பதாக என் தாயார் எதிர்வாதம் செய்தது எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. முருகேசனிடம் சீட்டு போட்டதற்காக கொடுத்த புரோநோட்டை வைத்துதான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக எனது தாயார் சொல்லி எனக்கு தெரியும். நான் சொல்வது போல் என் தாயார் எதிர்வாதம் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் தாயார் வாதியிடம் கடன் வாங்கியது உண்மை என்றாலும் அந்த கடனை திருப்ப செலுத்த என் தாயார் கடமைப்பட்டவர் என்றாலும் அவர் காலம் சென்றுவிட்டதால் தாயார் பெற்ற கடனை நானும் எனது சகோதரரும்

சட்டத்தின்பால் செலுத்த கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல. வாதி வழக்குப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/-மகேந்திரன்

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/-ஆர்.சரவணபாபு,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.